**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**23 |
| Name | : | **தேன்மொழி** |
| Husband Name | : | **மணி** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 40/2025 |

**தேதி : 03.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். அவர் எங்கள் தெருவை சேர்ந்தவர். ரொம்ப பழக்கமானவர். அவர் என்னிடம் அவருடைய குடும்ப செலவிற்காகவும், மாமனார், மாமியார் மருத்துவ செலவிற்காகவும், அவருடைய தங்கையின் மருத்துவ செலவிற்காகவும் பணம் தேவைப்படுவதாக என்னிடம் சொன்னார். அதனால் காரையிலுள்ள டோரா என்ற தனியார் நிறுவனத்தில் கடன் ரூ.22,500/-ஐ பெற்று வசந்தியிடம் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அவர் அந்த கடன் தொகையின் தவணைகளை கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி கடன் வாங்கிகொடுத்தேன். ஆனால் எதிரி வசந்தி கடனுக்கான தவணை தொகைகளை சரியாக செலுத்தவில்லை. வசந்தியின் வீட்டில் நான் சென்று பார்த்தபோது அவர் வீட்டில் இல்லை. விசாரித்தபோது அவர் என்னைமட்டுமில்லாமல் நிறைய பேரை ஏமாற்றியுள்ள விவரம் தெரிந்துகொண்டேன்.

சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலை் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். வசந்திக்கு வாங்கிகொடுத்த கடனுக்கான தவணை தொகைகளை தற்போது நான்தான் கட்டிவருகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி என்னுடைய பக்கத்துவீட்டுக்காரர் என்றால் சரிதான். இந்த லோனை தவிர வேறு லோன் எதிரிக்கு நான் வாங்கிகொடுக்கவில்லை. இதற்கு முன்பு வேறு நபர்கள் மூலம் கடன் பெற்று சரியாக செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரிக்கைகில் காரையிலுள்ள டோரா நிறுவனத்தில்தான் பணம் வாங்கி கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மொத்த தவணைகள் 10 ஆகும், அதில் இரண்டு, மூன்று தவணைகளை எதிரி செலுத்தவில்லை. மற்ற தவணைகளை எதிரி கட்டியுள்ளார். எதிரிக்கு ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவரை முற்றுகையிட்டதால் அவரால் தவணைகளை சரிவர செலுத்தமுடியவில்லை என்றால் சரிதான். எனக்கு சேர வேண்டிய பணத்தை எதிரி தந்துவிடுவார் என்றால் கொடுத்தால் வாங்கிகொள்ளுகிறேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.